# கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், இலங்கை

## வெற்றிடம்: வேலைகள் பொறியியலாளர் (சிவில்) தரம் III (நிரந்தரம்)

வேலைகள் பொறியியலாளர் (சிவில்) தரம் III நிரந்தர பதவிக்காக கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. தகைமைகள்**

(a) அபேட்சர்கள் ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/ உயர் கல்வி நிறுவனம் ஒன்று மற்றும் இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தில் (IESL) இருந்து சிவில் பொறியியல் சிறப்புத் துறையில் B.Sc பொறியியல் பட்டம் மற்றும் இலங்கை பொறியியல் சபையில் (ECSL) இணை பொறியியலாளர் அல்லது அதற்கு மேற்பட்ட பதிவை பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

(b) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் சிவில் பொறியியல் வேலைகளில் குறைந்தது இரண்டு (02) ஆண்டுகள் அனுபவத்துடன் ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/ உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் இருந்து சிவில் பொறியியல் தொழில்நுட்பம் அல்லது நிர்மாணத் தொழில்நுட்பத்தில் இளமாணி (BET) பட்டத்தைப் பெற்றிருத்தல் மற்றும் இலங்கை பொறியியல் சபையில் (ECSL) இணை பொறியியலாளர் அல்லது அதற்கு மேற்பட்ட பதிவை பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

(c) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் சிவில் பொறியியல் வேலைகளில் குறைந்தது ஏழு (07) ஆண்டுகள் அனுபவத்துடன் சிவில் பொறியியலுக்கு இணையான தொழில்நுட்ப சிறப்பில் தேசிய டிப்ளோமா ஒன்றை பெற்றிருத்தல் மற்றும் இலங்கை பொறியியல் சபையில் (ECSL) கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளர் அல்லது அதற்கு மேற்பட்ட பதிவை பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு: தொழில் பயிற்சிக் காலம் அனுபவக் காலத்தில் சேர்க்கப்படமாட்டாது.**

**2. தேர்வு அளவுகோல்**

a) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் தேர்வு

b) கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்கள் தகுதி அடிப்படை தேர்வுக்கு கருத்தில் கொள்ள தகுதி பெறுவர்.

**3. ஊதியம் மற்றும் நன்மைகள்**

- சம்பள அளவு: ரூபா 85,305 – 3x2,020 – 91,365 (EB) 94,905; 12 x 2,400 – 122,565 p.m. (U-EX 1 (II)). (தேர்வு செய்யப்பட்ட அபேட்சகர்கள் ரூபா 85,305/- p.m. இன் ஆரம்ப சம்பளப் படியில் வைக்கப்படுவார்).
- கொடுப்பனவுகள்: 36% - ரூபா 330/- இன் மாதாந்த கட்டாய கொடுப்பனவு (MCA) செலுத்தப்படும். வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு மற்றும் மற்ற அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
- சேபலாப நிதியம் மற்றும் ஓய்வூதியம்: தேர்வு செய்யப்பட்ட அபேட்சகர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு தமது மாதாந்த சம்பளத்தின் 10% பங்களிப்பை செலுத்துவார். பல்கலைக்கழகம் 15% பங்களிப்புச் செய்யும் (அதில் 8% பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்திற்கு வரவு வைக்கப்படுவதோடு பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு 7% வரவு வைக்கப்படும்).
- ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்: ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு சம்பளத் தொகையில் 3% இற்கு இணையான பங்களிப்பை பல்கலைக்கழகம் செய்யும்.
- பணிக்கொடை: 1982 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்தின் கொடுப்பனவு ஏற்பாடுகளுக்கு அமைய பணிக்கொடை கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

**4. விண்ணப்பித்தல்**

a) மேலுள்ள பதவிக்கான விண்ணப்பங்களை https://gwu.ac.lk/ என்ற பல்கலைக்கழக இணையதளத்தில் இருந்து தரவிறக்கம் செய்யப்பட்ட பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் மேற்கொள்ளல் வேண்டும். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனைத்து தொடர்புடைய சான்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளுடன் 2026 ஜூன் 12 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பிரதிப் பதிவாளர், கல்விசார் நிறுவனப் பிரிவு, கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், கண்டி வீதி, யக்கல இலங்கை என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

b) விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

c) முழுமை பெறாத, தாமதமாக அல்லது உத்தியோகபூர்வ பல்கலைக்கழக வடிவத்திற்கு அமையாத விண்ணப்பங்கள் எந்த அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

d) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவகங்கள்/ நிறுவனங்கள், அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டரீதியான சபைகளின் அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களை குறித்த திணைக்கள தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும். குறித்த திணைக்கள தலைவர்கள் ஊடாக அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

e) அபேட்சகர்களை குறுகிய பட்டியலில் சேர்ப்பதற்கு கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம் உரிமை பெற்றுள்ளது.

**பதிவாளர்**
**கம்பஹா விக்ரமாராச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், இலங்கை**
**திகதி: 2026 மே 22**